Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்




New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 147 | உள்ளூர் - 27.05.2026 | புதன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 147 | வெளியூர் - 28.05.2026 | வியாழன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**பிடித்த வேலை கிடைக்க எளிய பரிகாரம்!** | **புதன்தோறும் கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்!** | **தமிழக அரசியலில் தினம் ஒரு திருப்பம்!** | **டாஸ்மாக் ஊழியர்கள் வேலைநிறுத்த போராட்டம்!**

## பிரதமர் மோடியுடன் ஆஸ்திரேலிய வெளியுறவுத் துறை அமைச்சர் சந்திப்பு!



புதுடெல்லி, மே. 27–

சுதந்திரமான, வெளிப்படையான, பாதுகாப்பான மற்றும் செழிப்பான இந்தோ–பசிபிக் பிராந்தியத்திற்காக இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் தொடர்ந்து இணைந்து செயல்படும்,'' என்று பிரதமர் மோடி எக்ஸ் தள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

குவாட் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்ற பென்னி வாங், பின்னர் இந்த அமைப்பு பல புதிய முன்னெடுப்புகளை எடுத்து வருவதாக கூறினார்.

இது குறித்த எக்ஸ் தள பதிவில் அவர், "நாங்கள் நடத்திய ஒவ்வொரு கூட்டத்திலும், முன்னேற்றத்தை ஊக்குவிப்பதிலும், உண்மையான விளைவுகளை உறுதி செய்வதிலும் கவனம் செலுத்தி வருகிறோம். உண்மையான தேர்வுகளை வழங்குவது எங்கள் கடமையும் பொறுப்புமாகும், குறிப்பாக எங்கள் பிராந்தியத்தில் (இந்தோ–பசிபிக்) மூலோபாய சூழ்நிலைகள் மோசமடைந்து வருவதால் இது அவசியமாகிறது. இப்பிராந்தியம் கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கிறது. ஈரான் ஹார்முஸ் ஜலசந்தியை மூடியதால் எங்கள் பிராந்தியத்திற்கு ஏற்படும் விளைவுகளையும், அது எங்கள் எரிசக்தி பாதுகாப்பிற்கு என்ன அர்த்தம் கொடுக்கும் என்பதையும் நாங்கள் அறிவோம்,'' என்று அவர் கூறினார்.

## அரசு வேலைவாய்ப்புகளில் 69 சதவீத இடஒதுக்கீடு: முதல்-அமைச்சர் விஜய் ஆலோசனை!





சென்னை, மே. 27–

தமிழ்நாடு முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் தலைமையில் தமிழ்நாட்டின் கல்வி நிலையங்களில் மாணவர் சேர்க்கை மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் 69 சதவீத இடஒதுக்கீட்டிற்கு எதிராக சுப்ரீம்கோர்ட்டில் தொடரப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:– தமிழ்நாடு முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில். தமிழ்நாட்டின் கல்வி நிலையங்களில் மாணவர் சேர்க்கை மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் 69 சதவீத இடஒதுக்கீட்டிற்கு எதிராக மாண்பமை சுப்ரீம் கோர்ட்டில் தொடரப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பான கூட்டம் நடைபெற்றது.


தமிழ்நாட்டிலுள்ள கல்வி நிலையங்களில் மாணவர் சேர்க்கை மற்றும் 69 சதவீத இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த தமிழ்நாடு சட்டம் 45/1994–க்கு எதிராக மாண்பமை சுப்ரீம்கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்குகள் 27.05.2026 அன்று விசாரணைக்கு வர உள்ளன.

இந்நிலையில், நடைமுறையிலுள்ள 69 சதவீத இடஒதுக்கீட்டினை பாதுகாக்கும் நோக்கில், நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள தமிழ்நாடு முதல்–அமைச்சர் அவர்கள் அறிவுரைகளை வழங்கினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் ஆர். நிர்மல் குமார். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் வி. சம்பத் குமார். அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண், பிற்படுத்தப்பட்டோர். மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் வட தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப. சட்டத்துறை செயலாளர் எஸ். ஜார்ஜ் அலெக்சாண்டர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முன்னாள் பிரதமர் நேரு நினைவு நாள்: ராகுல் காந்தி, கார்கே அஞ்சலி!



புதுடெல்லி, மே. 27–

முன்னாள் பிரதமர் நேருவின் நினைவு நாளான தலைவர்கள் பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் 62–வது நினைவு நாளான இன்று காங்கிரஸ் தலைவர்கள் ராகுல் காந்தி, கார்கே உள்ளிட்டோர் அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர். நவீன இந்தியாவின் சிற்பி எனப்படும் ஜவஹர்லால் நேருவின் கொள்கைகள், நமது நாடு வளர்ச்சிப் பாதையில் செல்ல நமக்குத் தொடர்ந்து வழிகாட்டும் என காங்கிரஸ் கட்சி தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி உள்பட அரசியல் தலைவர்கள் பலரும் நேரு நினைவு நாளில் அவருக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்திய சுதந்திரத்திற்குப் போராடியவர்களில் முக்கியமானவரான நேரு சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராவார். பிரதமராக 16 ஆண்டுகள் 286 நாள்கள் பணியாற்றியுள்ளார். இந்தியாவில் அதிக காலம் பிரதமராக இருந்தது நேரு ஒருவரே.



திருப்பூர் மத்திய மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான க.செல்வராஜ் எம்எல்ஏ அவர்கள் அண்ணா அறிவாலயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முன்னாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை மரியாதை நிமித்தமாக சந்தித்தார் அப்போது உடன் ஆர் எஸ் பாரதி. ஏ.வ.வேலு. கே என் நேரு.ஆர் ராசா. உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## முதல்வர் விஜய் டெல்லி பயணம்!



சென்னை, மே. 27–

தமிழக முதல்–அமைச்சராக விஜய் கடந்த 10–ந்தேதி பதவியேற்றார். முதல்–அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு முதல் முறையாக விஜய் டெல்லி பயணம் செய்கிறார். காலை 10 மணிக்கு சென்னை விமான நிலையத்தில் இருந்து சிறப்பு விமானம் மூலம் டெல்லி சென்றார்.டெல்லியில் தமிழ்நாடு அரசு விருந்தினர் இல்லத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

## தொடரும் பெட்ரோல், டீசல் விலை உயர்வு!





சென்னை, மே. 27–

சென்னையில் பெட்ரோல் மற்றும் டீசல் விலை 6வது முறையாக உயர்த்தப்பட்டு விற்பனையாகிறது. சென்னையில் பெட்ரோல் விலை 33 காசுகள் உயர்ந்து ஒரு லிட்டர் ரூ.108.20க்கு விற்பனையாகிறது; டீசல் விலை 32 காசுகள் உயர்ந்து ஒரு லிட்டர் ரூ. 99.98க்கு விற்பனை செய்யப்படுகிறது.

# சரியானதே வாக்காளர் பட்டியல் சீர்திருத்தம்!

## உச்ச நீதிமன்றம் தீர்ப்பு!!

புதுடெல்லி, மே. 27–

இந்திய தேர்தல் கமிஷனின் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கு (எஸ்ஐஆர்) எதிரான வழக்கில் இன்று (மே 27) சுப்ரீம்கோர்ட் அதிரடி தீர்ப்பு அளித்தது.வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்.,) செய்யும் பணி சரியானதே என நீதிபதிகள் தெரிவித்தனர்.

தேர்தலில் முறைகேடுகள் நடப்பதை தவிர்க்கும் வகையில், உயிரிழந்தோர், நிரந்தரமாக புலம்பெயர்ந்தோர், இரு வேறு இடங்களில் பெயர்களை பதிவு செய்தோர் ஆகியோரை கண்டறிந்து, அவர்களது பெயர்களை நீக்குவதற்காக இந்திய தேர்தல் கமிஷனால் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தம் (எஸ்ஐஆர்) பணியை முன்னெடுத்தது.

தேர்தல் கமிஷனால் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் நேரடியாக வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரில் வந்து விவரங்களைச் சேகரித்து தகுதியற்றவர்கள் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கம் செய்யப்பட்டது. எஸ்ஐஆர் பணிகளை எதிர்த்து ஏராளமான மனுக்களை அரசியல் கட்சியினர், தனி நபர்கள் மற்றும் சமூக அமைப்புகள் சுப்ரீம்கோர்ட்டில் தாக்கல் செய்தது.

இந்த மனுக்கள், சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதி ஜாய்மாலா பக்சி அடங்கிய அமர்வு முன் விசாரணை நடந்து வந்தது. அனைத்து தரப்பு விசாரணைகளும் முடிந்த நிலையில் இன்று(மே 27) சுப்ரீம்கோர்ட் நீதிபதிகள் இன்று (மே 27) தீர்ப்பு அளித்தனர். தீர்ப்பில் நீதிபதிகள் கூறியதாவது:

சுதந்திரமான, நியாயமான தேர்தல் என்ற இலக்குடன் நேரடி தொடர்புடையது என்பதால், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்.,) செய்யும் பணி சரியானதே; அந்த பணியில் நாங்கள் திருப்தி அடைகிறோம் என சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் தெரிவித்தனர்.



**சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் முக்கிய அம்சங்கள்:**

* வாக்காளர் பட்டியலில் மேற்கொள்ளப்படும் சிறப்புத் திருத்தம், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை உறுதி செய்வதற்கான அரசியலமைப்பு இலக்குடன் நேரடித் தொடர்புடையது.

* அத்தகைய தேர்தல்கள் வெறும் வாக்குப்பதிவு முறைகளை மட்டும் சார்ந்திருக்கவில்லை. மாறாக ஜனநாயக செயல்முறையின் அடித்தளமாக விளங்கும் வாக்காளர் பட்டியல்களின் நேர்மை, துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையை அடிப்படையாகக் கொண்டது.

* கடைசியாக வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தம் 40 ஆண்டுக்கு முன் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு பிறகு பல ஆண்டுகளாக நிகழ்ந்த பெருமளவு சேர்க்கைகள், நீக்கங்கள், நகரமயமாக்கல், இடம்பெயர்வு ஆகியவற்றால் வாக்காளர் பட்டியல்களில் இரட்டைப்பதிவு ஏற்பட சாத்தியம் அதிகம். இது போன்ற தேர்தல் ஆணையம் தெரிவித்த காரணங்கள், வாக்காளர் பட்டியலின் அடிப்படை நேர்மையைப் பாதுகாப்பதையே தெளிவான நோக்கமாகக் கொண்டிருந்தன.

* இந்தியத் தேர்தல் ஆணையம் பின்பற்றிய நடைமுறையானது, 1950ம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் மற்றும் 1960ம் ஆண்டின் வாக்காளர் பதிவு விதிகள் ஆகியவற்றுக்கு முரணானது என்ற வாதத்தை நீதிமன்றம் நிராகரிக்கிறது.

* அந்த நடைமுறையானது ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் உள்ள நபர்களின் குடியுரிமையை மறுக்கிறது என்ற வாதத்தையும் நீதிமன்றம் நிராகரிக்கிறது.

* இந்தியத் தேர்தல் ஆணையம் பின்பற்றிய நடைமுறையானது, 1950ம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் மற்றும் 1960ம் ஆண்டின் வாக்காளர் பதிவு விதிகள் ஆகியவற்றுக்கு முரணானது என்ற வாதத்தை நீதிமன்றம் நிராகரிக்கிறது.

* அந்த நடைமுறையானது ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் உள்ள நபர்களின் குடியுரிமையை மறுக்கிறது என்ற வாதத்தையும் நீதிமன்றம் நிராகரிக்கிறது.

* இத்தகைய ஒரு செயல்பாட்டின்போது, வாக்காளர்களை ஆதாரங்களுடன் கூடிய ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்பது, தவறல்ல. ஏற்கனவே உள்ள பதிவுகளை மீண்டும் உறுதிப்படுத்தவும், தேவைப்பட்டால் திருத்த முற்படுவதுமான ஆணையத்தின் வழிமுறையை தான் அது பிரதிபலிக்கிறது.

* வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்காக, குடியுரிமை தொடர்பான கேள்விகளை ஆராய இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் உள்ளது.

* எனினும் தேர்தல் ஆணையத்தின் எதிர்மறையான முடிவு, அந்த நபர் இந்தியக் குடிமகன் அல்ல என்ற உறுதியான முடிவுக்கு வழிவகுக்காது.

* தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு வாக்காளர் பட்டியல் தயாரிப்புக்கு மட்டுமே. இவ்வாறு சுப்ரீம்கோர்ட் நீதிபதிகள் தெரிவித்தனர்.

## இபிஎஸ் இடம் சரண் அடைந்தது வேலுமணி கோஷ்டி!



சென்னை, மே. 27–

அதிமுக கோஷ்டிகள் இடையே ஏற்பட்டிருந்த மோதல் நீங்கி, இன்று இரு தரப்பும் ஒன்றாக இணைந்தனர். எனினும், 3 எம்எல்ஏ.,க்கள் மட்டும் இந்த இணைப்புக்கு வரவில்லை.

தமிழக சட்டசபை தேர்தலில், த.வெ.க., 108 தொகுதிகளில் வெற்றி பெற்றது. தி.மு.க., 59; அ.தி.மு.க., 47 தொகுதிகளிலும் வென்றன.தேர்தல் தோல்வி விரக்தியால் அதிமுகவில், அக்கட்சியின் பொதுச்செயலர் பழனிசாமி தலைமையில் 22 பேர்; முன்னாள் அமைச்சர் வேலுமணி தலைமையிலான அணியில் 25 பேர் என, இரண்டு அணியாக கட்சி எம்.எல்.ஏ.,க்கள் பிரிந்தனர்.

வேலுமணி அணி ஆதரவால், 144 எம்.எல்.ஏ.,க்கள் ஆதரவுடன் முதல்வர் விஜய், சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபித்தார். அமைச்சரவையில், வேலுமணி தரப்பு அமைச்சர் பதவியை எதிர்பார்த்தது. ஆனால், அமைச்சரவை விரிவாக்கத்தின் போது, அ.தி.மு.க., சேர்த்து கொள்ளப்படவில்லை. இதனால், வேலுமணி தரப்பு எம்.எல்.ஏ.,க்கள் விரக்தி அடைந்தனர். சிலர் பழனிசாமி பக்கம் செல்லத்துவங்கினர். இதற்கிடையே அதிமுக எம்எல்ஏக்கள் 4 பேர் ராஜினாமா செய்து ஆளும் கட்சியான தவெக பக்கம் சாய்ந்தனர். தங்கள் தரப்பு பலவீனம் அடைய தொடங்கியதை உணர்ந்த வேலுமணி தரப்பு எம்எல்ஏ.,க்கள் ஒவ்வொருவராக இபிஎஸ் பக்கம் சாயத் தொடங்கினர்.நிலைமை விபரீதம் ஆன நிலையில் வேலுமணி தரப்பினர் இறங்கி சமாதானத்துக்கு வந்தனர். இன்று வேலுமணி, நத்தம் விஸ்வநாதன் உள்ளிட்டோர் இபிஎஸ் வீட்டுக்கு சென்று பேச்சு நடத்தினர். இதையடுத்து இரு அணிகளும் ஒன்றாக இணைந்ததாக எம்எல்ஏ.,க்கள் கூறினர். இந்த இணைப்புக்காக, சி.வி.சண்முகம், புவனகிரி அருண்மொழி தேவன், விராலிமலை விஜயபாஸ்கர் உள்ளிட்டோர் இபிஎஸ் வீட்டுக்கு வரவில்லை. இரு தரப்பினர் இடையே தொடர்ந்து பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இது பற்றி இன்று மதியம் அதிமுக தலைவர்கள் பேட்டி அளிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சமூகத்தில் மனிதநேயமும், மதநல்லிணக்கமும் மேலும் தழைத்தோங்க வேண்டும்!

### முதலமைச்சர் விஜய் பக்ரீத் வாழ்த்து!!



சென்னை, மே. 27–

சமூகத்தில் மனிதநேயமும், மதநல்லிணக்கமும் மேலும் தழைத்தோங்க வேண்டும் என முதலமைச்சர் விஜய் பக்ரீத் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தில் தெரிவித்ததாவது; ஈகைத் திருநாளாம் பக்ரீத் திருநாளை முன்னிட்டு, இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். இறைவனின் மகன் கட்டளைக்கிணங்க தனது ஒரே இஸ்மாயிலை தியாகம் செய்யத் துணிந்த இப்ராஹிம் நபி அவர்களின் உன்னதமான இறைபக்தியையும், தியாகத்தையும் நினைவுகூரும் வகையில் பக்ரீத் திருநாள் கொண்டாடப்படுகிறது.

இறைநம்பிக்கை. தியாகம், கருணை, பகிர்வு, மனிதநேயம் ஆகிய உயரிய விழுமியங்களை மனிதகுலத்திற்கு உணர்த்தும் புனிதப் பெருநாளாக பக்ரீத் திகழ்கிறது. ஏழை, எளிய மக்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதையும், சமூகத்தில் அன்பும், சமத்துவமும் நிலைக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தும் பக்ரீத் திருநாளில் சமுதாயத்தில் மனிதநேயமும், மதநல்லிணக்கமும் மேலும் தழைத்தோங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அனைவருக்கும் எனது பக்ரீத் திருநாள் வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 27.05.2026
விசுவாவசு தமிழ் வருடம்
வைகாசி மாதம் 13-ம் தேதி

## ஈரான் அமெரிக்க மோதல்: உலகம் எதிர்கொள்ளும் சவால்கள்!




உலக அரசியலில் அமெரிக்காவும் ஈரானும் முக்கிய பங்கு வகிக்கும் நாடுகளாக உள்ளன. இவ்விரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் அதிகரிக்கும் ஒவ்வொரு முறையும், அதன் தாக்கம் மத்திய கிழக்குப் பிராந்தியத்தைத் தாண்டி உலகம் முழுவதும் உணரப்படுகிறது. நேரடி போர் அல்லது தீவிர இராணுவ மோதல் உருவானால், அதன் விளைவுகள் பொருளாதாரம், எரிசக்தி, வர்த்தகம் மற்றும் மனிதநேயத் துறைகளில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தக்கூடும்.

முதலில், உலக எண்ணெய் சந்தை கடுமையாக பாதிக்கப்படும். உலகின் முக்கிய எண்ணெய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பகுதிகளில் ஒன்றான மத்திய கிழக்கில் போர் வெடித்தால், கச்சா எண்ணெய் விலை திடீரென உயரக்கூடும். இதன் விளைவாக பெட்ரோல், டீசல் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலையும் அதிகரிக்கும். எண்ணெய் இறக்குமதியை அதிகம் நம்பியுள்ள நாடுகள் பொருளாதார அழுத்தத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

இரண்டாவதாக, உலக வர்த்தகப் பாதைகளில் பாதிப்பு ஏற்படலாம். குறிப்பாக ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக உலகின் கணிசமான அளவு எண்ணெய் மற்றும் எரிவாயு போக்குவரத்து நடைபெறுகிறது. அப்பகுதியில் பாதுகாப்பு சிக்கல்கள் ஏற்பட்டால், சர்வதேச கப்பல் போக்குவரத்து மற்றும் வர்த்தகச் சங்கிலிகள் தடைபட வாய்ப்பு உள்ளது. இதனால் பல நாடுகளின் தொழில் மற்றும் உற்பத்தித் துறைகள் பாதிக்கப்படலாம்.

மூன்றாவதாக, மனிதநேய நெருக்கடி உருவாகும் அபாயம் உள்ளது. போர் காரணமாக பொதுமக்கள் இடம்பெயர வேண்டிய சூழல் ஏற்படலாம். அகதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பது அண்டை நாடுகளுக்கும் சர்வதேச அமைப்புகளுக்கும் கூடுதல் சுமையை ஏற்படுத்தும். உயிரிழப்புகள் மற்றும் அடிப்படை வசதிகளின் சேதம் மனித சமுதாயத்திற்கு மிகப் பெரிய இழப்பாக அமையும்.

மேலும், உலக நிதிச் சந்தைகளிலும் நிலைகுலைவு ஏற்படலாம். முதலீட்டாளர்கள் அச்சம் காரணமாக பங்குச் சந்தைகளில் இருந்து விலகக்கூடும். இதனால் பல நாடுகளின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படுவதுடன், பணவீக்கமும் அதிகரிக்கலாம்.

இந்தியாவைப் போன்ற வளர்ந்து வரும் நாடுகளும் இதன் தாக்கத்திலிருந்து முழுமையாகத் தப்ப முடியாது. எரிபொருள் விலை உயர்வு, இறக்குமதி செலவு அதிகரிப்பு, பணவீக்க அழுத்தம் போன்றவை மக்களின் அன்றாட வாழ்க்கையை நேரடியாகப் பாதிக்கக்கூடும்.

எனவே, போர் என்பது எந்தப் பிரச்சினைக்கும் நிரந்தரத் தீர்வாக அமையாது. பேச்சுவார்த்தை, இராஜதந்திர அணுகுமுறை மற்றும் பரஸ்பர புரிதல் ஆகியவையே நீடித்த அமைதிக்கான பாதையாகும். உலக நாடுகள் பதற்றத்தை அதிகரிப்பதற்குப் பதிலாக அமைதியை வலியுறுத்தும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும். ஏனெனில் ஒரு பிராந்தியத்தில் வெடிக்கும் போர், இன்று உலகமயமாக்கப்பட்ட உலகில் அனைவரையும் பாதிக்கும் விளைவுகளை ஏற்படுத்தும்.

அமைதியே உலகின் மிகப் பெரிய தேவை; போர் அல்ல.

# கர்நாடக முதல் மந்திரி சித்தராமையா பதவி விலகல்?



கர்நாடகா, மே. 27–

கர்நாடகத்தில் கடந்த 2023–ம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சி அமைந்தது. அப்போது முதல்–மந்திரி பதவிக்கு சித்தராமையா, கட்சியின் மாநில தலைவர் டி.கே. சிவக்குமார் இடையே கடும் போட்டி நிலவியது. அவர்கள் 2 பேரிடமும் ஒரு வாரம் பேச்சுவார்த்தை நடத்திய காங்கிரஸ் மேலிடம் நீண்ட இழுபறிக்கு பிறகு சித்தராமையாவுக்கு முதல்–மந்திரி பதவியை வழங்கியது.

அப்போது, சித்தராமையா 2½ ஆண்டுகளை நிறைவு செய்த பிறகு முதல்–மந்திரி பதவியை டி.கே. சிவக்குமாருக்கு வழங்க முன்வர வேண்டும் என்று கட்சி மேலிடம் ரகசிய ஒப்பந்தம் போட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஆனால் அது எழுத்து பூர்வ மாக போடப்படவில்லை. 2½ ஆண்டுகளுக்கு பிறகு ஆட்சி தலைமையை விட்டுக் கொடுப்பதாக சித்தராமையா சம்மதம் தெரிவித்ததாக சொல்லப்படுகிறது. சித்தராமையா முதல்–மந்திரியாக பதவி ஏற்று கடந்த ஆண்டு (2025) நவம்பர் மாதத்துடன் 2½ ஆண்டுகள் நிறைவு பெற்றது. இதையடுத்து துணை முதல்–மந்திரி டி.கே.சிவக்குமார், தனக்கு முதல்–மந்திரி பதவி வழங்க வேண்டும் என்று திடீரென போர்க்கொடி தூக்கினார்.

இதனால் கர்நாடக அரசியலில் பரபரப்பு ஏற்பட்டது. அவருக்கு ஆதரவாக 40–க்கும் மேற்பட்ட எம்.எல்.ஏ.க்களும் குரல் கொடுத்தனர். இதன் காரணமாக கட்சிக்கும், ஆட்சிக்கும் கடும் நெருக்கடி ஏற்பட்டது. சித் தராமையா, டி.கே.சிவக்குமார் ஆகியோர் மாறி மாறி வார்த்தை போரில் ஈடுபட்டனர். இதையடுத்து இந்த விவகாரத் தில் தலையிட்ட காங்கிரஸ் மேலிடம், கட்சி தீர்மானிக்கும் வரை பொறுமை காக்கும்படி டி.கே.சிவக்குமாருக்கு உத்தர விட்டது.

**ராகுல் காந்தியுடன் சந்திப்பு**

இதையடுத்து அவர் தனது முடிவை தற்காலிகமாக கைவிட்டு அமைதி நிலைக்கு திரும்பினார். இந்த நிலையில் 26–ந் தேதி(நேற்று) டெல்லி வரும்படி நேற்று காங்கிரஸ் மேலிடம் சித்தராமையா, டி.கே.சிவக்குமாருக்கு அழைப்பு விடுத்தது. இதை ஏற்று அவர்கள் 2 பேரும் நேற்று முன்தினம் இரவு டெல்லி சென்றனர். அதைத்தொடர்ந்து நேற்று டெல்லியில் உள்ள காங்கிரஸ் அலுவலகத்தில் ராகுல் காந்தியை முதல்–மந்திரி சித்தராமையா சந்தித்து பேசினார்.

**ராஜினாமா செய்ய முடிவு**

இந்த ஆலோசனையின் போது, ஏற்கனவே போடப்பட்ட ஒப்பந்தப்படி முதல்–மந்திரி பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று ராகுல்காந்தி கேட்டு கொண்டதாக தெரிகிறது. இதனை ஏற்று முதல்–மந்திரி பதவியை ராஜினாமா செய்ய சித்தராமையா முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இதனால் கர்நாடக அரசியலில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே முதல்–மந்திரி சித்தராமையா, தனது ஆதரவு மந்திரிகள் மற்றும் எம்.எல்.ஏ.க்களுடன் டெல்லியில் உள்ள மந்திரி கே.ஜே.ஜார்ஜின் இல்லத்தில் கூடி ஆலோசனை நடத்தினார். அப்போது மந்திரி கே.ஜே.ஜார்ஜ் உள்பட பலரும் சித்தராமையாவுக்கு ஆதரவாக இருப்பதாக தெரிவித்தனர். ஆனால் அவர் தான் ராஜினாமா முடிவில் உறுதியாக இருப்பதாக கூறியதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இந்த நிலையில் சித்தராமையா மாநிலங்களவை எம்.பி.யாக வாய்ப்புள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளது.

# டாஸ்மாக் ஊழியர்கள் வேலைநிறுத்த போராட்டம்!



திருப்பூர், மே. 27–

திருப்பூர் மாவட்டத்தில் டாஸ்மாக் ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, கடந்த வாரம் டாஸ்மாக் மண்டல மேலாளரை சந்தித்து தங்களுக்கு கோரிக்கைகள் அடங்கிய மனுவை அளித்தனர். அதில் குறிப்பாக 'காலி பாட்டில் பை–பேக்' (Buy–back) திட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். இத்திட்டத்தினால் ஊழியர்களுக்குக் கூடுதல் பணிச்சுமையும், காலதாமதமும் ஏற்படுகிறது. வெளி முகமைகள் (Outsourcing/ Tendors) மூலமாக மட்டுமே பாட்டில்களைச் சேகரிக்க வேண்டும். தற்போது மாவட்டத்தில் நீதிமன்ற உத்தரவுப்படி மூடப்பட்டுள்ள சுமார் 30 டாஸ்மாக் கடைகளைச் சேர்ந்த 150–க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு உடனடியாக வேறு துறைகளில் மாற்றுப் பணி வழங்க வேண்டும். மேலும் இரவு 10 மணிக்குக் கடைகள் மூடப்படும் போது, போலீசார் உடனடியாகக் கடைகளை அடைக்க வற்புறுத்துகின்றனர். ஆனால், கடைகளில் 20 முதல் 40 லட்சம் ரூபாய் மதிப்பிலான சரக்குகள் இருக்கும் நிலையில், அன்றாட விற்பனை விவரக் கணக்குகளைச் சரிபார்த்து அரசுக்கு அறிக்கை அனுப்ப ஒன்றரை மணி நேரம் வரை தேவைப்படுகிறது. எனவே, இரவு 10 மணிக்கு மேல் கணக்குகளைச் சரிபார்க்க அவகாசம் தர வேண்டும் அல்லது இரவு 9 மணிக்கே விற்பனையை நிறுத்த அனுமதிக்க வேண்டும். ஊழியர்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். 23 வருடங்களுக்கும் மேலாகப் பணிபுரியும் ஊழியர்களுக்கு தற்போது மிகக் குறைந்த ஊதியமே வழங்கப்படுகிறது. தகுதி வாய்ந்த, உயர் கல்வி கற்ற ஊழியர்கள் இருக்கும் நிலையில், அவர்களுக்குத் தகுந்த காலமுறை ஊதியமாக குறைந்தபட்சம் 31,000 ரூபாயும், சீனியாரிட்டி அடிப்படையில் 70,000 ரூபாய் வரையும் வழங்க வேண்டும். என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை அளித்துள்ளனர். இந்த கோரிக்கைகள் குறித்து 25 ஆம் தேதிக்குள் முடிவு அறிவிக்க கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால் தற்பொழுது வரை எந்தவித அறிவிப்பும் அரசிடமிருந்து வராததை தொடர்ந்து, திட்டமிட்டபடி இன்று முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# தமிழக அரசியலில் தினம் ஒரு திருப்பம்!



சென்னை, மே. 27–

தேர்தலில் ஓட்டுபோட்டதற்கு ஆதாரமாக வாக்காளர்களின் கை விரலில் வைக்கப்பட்ட கருப்பு மை அழிந்து போவதற்குள் தமிழக அரசியலில் என்னென்னமோ மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

தனிப்பெரும்பான்மை கிடைக்காமல், புதிய அரசியல் வரவான த.வெ.க. ஆட்சி அமைத்துள்ள நிலையில், அக்கட்சிக்கு காங்கிரஸ், இரு கம்யூனிஸ்ட் கட்சிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் ஆதரவு கொடுத்துள்ளன.

**கட்சி தாவல் தடை சட்டம்**

அதே நேரத்தில், எஸ்.பி.வேலுமணி, சி.வி.சண்முகம் தலைமையில் பிளவுபட்ட அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் 25 பேரும் த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்து கூடுதல் பலத்தை சேர்த்தனர். இவர்களில் 5 பேருக்கு அமைச்சர் பதவி கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 3–ல் 2 பங்கு எம்.எல்.ஏ.க்கள் வெளியே வராததால், அவர்கள் மீது கட்சி தாவல் தடை சட்டம் பாயும் என்ற நிலை ஏற்பட்டது.

இதனால், த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்த 25 அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள், அடுத்து என்ன செய்வது? என்று யோசித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், அதில் சிலர் தங்களுடைய எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு, த.வெ.க.வில் இணைந்துள்ளனர்.

**4 அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா**

அதாவது, மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), ஜெயக்குமார் (பெருந்துறை), சத்தியபாமா (தாராபுரம்) ஆகிய 3 பேரும் நேற்று தங்களுடைய எம்.எல்.ஏ.க்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் இணைந்தனர். அதன் தொடர்ச்சியாக அ.தி.மு.க. எம்.எல்.ஏ. இசக்கி சுப்பையா (அம்பாசமுத்திரம்) தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு, த.வெ.க.வில் இணைந்திருக்கிறார். இன்னும் சிலர் இதேபோல், இணைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**இதற்கு முன்பு நிகழ்ந்ததே இல்லையா?**

தமிழக அரசியலில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை போல், இதற்கு முன்பு நிகழ்ந்ததே இல்லையா? என்ற கேள்வி அனைவரது மனதிலும் எழலாம். ஏன் இல்லை, இதுபோன்ற அரசியல் நெருக்கடிகள் ஏற்கனவே தமிழகத்தில் நடந்திருக்கிறது.

2006–ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில் தி.மு.க. அதிக இடங்களை கைப்பற்றினாலும், தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. அப்போது, அ.தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க. இடம் பெற்றிருந்தது. ம.தி.மு.க. சார்பில் கம்பம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கம்பம் ராமகிருஷ்ணன், தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார். அதன்பிறகு, 2009–ம் ஆண்டு கம்பம் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டு கம்பம் ராமகிருஷ்ணன் வெற்றி பெற்றார்.

**எதிர்க்கட்சி அந்தஸ்தை இழந்த தே.மு.தி.க.**

அதேபோல், அ.தி.மு.க சார்பில் திருச்செந்தூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அனிதா ராதாகிருஷ்ணனும், தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, பின்னர் நடைபெற்ற இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் அதே தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இதேபோல், 2011–ம் ஆண்டு அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றிருந்த தே.மு.தி.க. 29 இடங்களை கைப்பற்றி, எதிர்க்கட்சி அந்தஸ்துக்கு உயர்ந்தது. ஆனால், பின்னர் முதல்–அமைச்சர் ஜெயலலிதாவுக்கும், எதிர்க்கட்சி தலைவராக இருந்த விஜயகாந்துக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதால், சில தே.மு.தி.க. எம்.எல்.ஏ.க்களே அ.தி.மு.க.வுக்கு ஆதரவு அளித்தனர். ஒரே நேரத்தில் 8 தே.மு.தி.க. எம்.எல்.ஏ.க்கள் தங்களுடைய பதவிகளை ராஜினாமா செய்ததால், எதிர்க்கட்சி அந்தஸ்தை தே.மு.தி.க. இழந்தது.

**பண்ருட்டி ராமச்சந்திரன்**

அதன்பின்னர், 2013–ம் ஆண்டு தே.மு.தி.க.வை சேர்ந்த எதிர்க்கட்சி துணைத் தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரனும், அக்கட்சியைவிட்டு விலகி, எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு, அ.தி.மு.க.வுக்கு ஆதரவாகவும் செயல்பட்டார்.

இவ்வளவு ஏன், கடந்த ஆண்டு அ.தி.மு.க.வில் இருந்து விலகிய மனோஜ் பாண்டியன், வைத்திலிங்கம், ஓ. பன்னீர்செல்வம் ஆகியோர் தங்களுடைய எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு தி.மு.க.வில் இணைந்தனர். நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் தி.மு.க. சார்பில் அதே தொகுதிகளில் போட்டியிட்டு 3 பேரும் வெற்றி பெற்றனர்.

**குறுகிய காலத்தில் இதுவே முதல்முறை**

இப்படி, ஒவ்வொரு கால கட்டத்திலும் எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா செய்யும் நிகழ்வுகள் தமிழகத்தில் நடந்திருக்கின்றன. ஆனால், இவ்வளவு குறுகிய காலத்திற்குள் 4 எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா செய்திருப்பது இதுவே முதல் முறை ஆகும்.

# செயற்குழுக் கூட்டம்!






ராமநாதபுரம், மே. 27–

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை நகர் SDPI கட்சியின் செயற்குழுக் கூட்டம் நகர் தலைவர் முகமது ஜலீல் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் அதிகமான இடங்களில் போட்டியிட தீர்மானம் எடுக்கப்பட்டது. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மாவட்ட அமைப்பு பொதுச் செயலாளர் ஜெமீல், கட்சியின் கட்டமைப்பு விரிவாக்கம் மற்றும் தேர்தல் பணிகள் குறித்து விளக்கமளித்தார். மேலும், கீழக்கரையில் அதிகரித்து வரும் தெருநாய்கள் பிரச்சினைக்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும், அரசு மருத்துவமனை கட்டிடப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும், பயன்பாட்டில் இல்லாத ஆரம்ப சுகாதார நிலையத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும், அனைத்து வார்டுகளிலும் கொசு ஒழிப்பு மற்றும் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் மாவட்ட மற்றும் நகர நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் செயல்வீரர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# பிடித்த வேலை கிடைக்க எளிய பரிகாரம்!



வேலை கிடைக்காமல் அவதிப்படுபவர்களும் கிடைத்த வேலையை ஏதோ செய்ய வேண்டுமே என்று செய்பவர்களும் இந்த ஒரு பரிகாரத்தை செய்யும் போது பிடித்த வேலை அவர்களை தேடி வருவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும் என்று சொல்லப்படுகிறது.

வேலை கிடைக்க பரிகாரம் இந்த பரிகாரத்தை அமாவாசை தினத்தன்று மட்டும் செய்தால் போதுமானது. அமாவாசை அன்று காலை முதல் இரவுக்குள் இந்த பரிகாரத்தை எப்பொழுது வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால்மதியம் உச்சி காலப் பொழுதில் மட்டும் இதை செய்யக் கூடாது. இதை மட்டும் கவனத்தில் வைத்து கொள்ளுங்கள். அமாவாசை அன்று உங்கள் வீட்டின் அருகில் இருக்கும் அரச மரத்தடித்தடிக்கு கையில் ஒரு கைப்பிடி அரிசியை எடுத்துக் கொண்டு செல்லுங்கள். அங்கு சென்று அரச மரத்திற்கு முன்பாக கையில் அரிசியுடன் நின்று உங்களுடைய வேலை தொடர்பான வேண்டுதலை வைத்த பிறகு, கையில் உள்ள பச்சரிசியை கொஞ்சம் கொஞ்சமாக அரசமரத்தை சுற்றி போட்டுக் கொண்டே ஒன்பது முறை மரத்தை சுற்றி வர வேண்டும் . அப்படி மரத்தை சுற்றும் போது நீங்கள் எந்த வேலையை நினைக்கிறீர்களோ அது கிடைத்து விட்டதாக மனதில் நினைத்து கொள்ளுங்கள்.

இப்படியாக இந்த பரிகாரத்தை மூன்று மாதம் தொடர்ந்து செய்தால் போதும். அதாவது மூன்று அமாவாசை செய்யுங்கள். இத்துடன் சேர்ந்து வேலை கிடைப்பதற்கான உங்கள் முயற்சியில் சற்றும் தளர்ந்து விடாமல் செய்து கொண்டே இருக்க வேண்டும். இந்த மூன்று மாதங்கள் முடிவதற்குள்ளாக உங்களுக்கான வேலை வாய்ப்பு நிச்சயம்உங்களை தேடி வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அது மட்டும் இன்றி வேலை கிடைத்தும் வருமானம் போதாமல் இருப்பவர்கள். பதவி உயர்வு கிடைக்காமல் இருப்பவர்கள். வேறு நல்ல வேலைக்கு முயற்சி செய்பவர்கள் எல்லோரும் இந்த பரிகாரத்தை செய்தால் நல்ல பலனை கொடுக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேலை கிடைப்பதற்கான இந்த எளிய பரிகார முறையில் உங்களுக்கும் நம்பிக்கை இருப்பின் நம்பிக்கையுடன் செய்யலாம்.

# வேலைவாய்ப்பு முகாம்; கலெக்டர் தகவல்!




ராமநாதபுரம்,மே. 27–

இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தால் வேலைவாய்ப்பு பதிவு, பதிவு புதுப்பித்தல், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை, கூடுதல் பதிவு, முகவரி மாற்றம் உள்ளிட்ட அனைத்து பணிகளுக்கும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் இணையதளத்தில் எந்தவித கட்டணமின்றி வழங்கப்படுகிறது. மேலும், மேற்சுட்டிய அனைத்து சேவைகளையும் http://www.tnvelaivaaippu.gov.in என்ற இணையதளம் வாயிலாகவே மனுதாரர்கள் அளவில் செய்துகொள்ள வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் எவரும் போலி விளம்பரங்களையோ அல்லது இடைத்தரகர்களையோ நம்பி தனிப்பட்ட விவரங்களையோ அல்லது பணத்தையோ கொடுத்து ஏமாற வேண்டாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## சினிமா துளிகள்..!

# ஜாஸ் இசை கலைஞர் சோன்னி ரோலின்ஸ் காலமானார்!



ஜாஸ் இசை கலைஞர் மற்றும் பிரபல இசையமைப்பாளரான சோன்னி ரோலின்ஸ் அவருடைய 95 வயதில் இன்று காலமானார். அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உட்ஸ்டாக் நகரில் வீட்டில் இருந்தபோது இன்று மதியம் அவர் மரணமடைந்து உள்ளார்.


இதனை அவருடைய குடும்பத்தினர் எக்ஸ் வலைதளத்தில் பகிர்ந்து உள்ளனர். எனினும், இந்த மரணத்திற்கான காரணம் எதுவும் வெளியிடப்படவில்லை. இசை துறையில் 1956–ம் ஆண்டில் இருந்து பல ஆண்டுகளாக பல்வேறு ஜாஸ் பாடல்களுக்கு இசையமைத்து உள்ளார்.

அவற்றில் 1957–ம் ஆண்டில் வெளியான வே அவுட் வெஸ்ட் என்ற ஆல்பம் ரசிகர்களிடையே அதிக வரவேற்பை பெற்றது. ஏரெஜின், டாக்சி, ஒலியோ மற்றும் செயின்ட் தாமஸ் போன்ற பாடல்களும் அவர் இசையமைத்ததில் முக்கியத்துவம் வாய்ந்தவை.

அவர் கிராமி வாழ்நாள் சாதனை விருது, கென்னடி சென்டர் ஹானர்ஸ் மற்றும் நேசனல் மெடல் ஆப் ஆர்ட்ஸ் போன்ற பெருமைகளை பெற்றுள்ளார். ரோலின்ஸ் அவருடைய மருமகன் கிளிப்டன் ஆண்டர்சன் மற்றும் அவருடைய மருமகள்கள் வால்லின் ஆண்டர்சன் மற்றும் கேப்ரியல்லே டிகுரோட் ஆகியோருடன் வசித்து வந்துள்ளார்.




## இதயநோய் வராமல் தடுக்க ஆரோக்கிய வழிமுறைகள்!




இதய நோய்கள் உலகளவில் முக்கியமான உடல்நலப் பிரச்சினைகளில் ஒன்றாகும். ஆனால், சரியான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதன் மூலம் இதய நோய் ஏற்படும் அபாயத்தை கணிசமாகக் குறைக்க முடியும்.

1. ஆரோக்கியமான உணவு முறையைப் பின்பற்றுங்கள்

தினமும் காய்கறிகள், பழங்கள், கீரைகள் அதிகம் சாப்பிடுங்கள்.

முழுத்தானிய உணவுகளைத் தேர்வு செய்யுங்கள்.

எண்ணெய், நெய் மற்றும் அதிக கொழுப்பு உள்ள உணவுகளை குறையுங்கள்.

உப்பு மற்றும் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்துங்கள்.

பதப்படுத்தப்பட்ட (Processed) உணவுகளைத் தவிர்க்கவும்.

2. தினசரி உடற்பயிற்சி செய்யுங்கள்

தினமும் குறைந்தது 30 நிமிடங்கள் வேகமாக நடக்கவும்.

சைக்கிள் ஓட்டுதல், நீச்சல் அல்லது யோகா போன்ற பயிற்சிகளை மேற்கொள்ளலாம்.

வாரத்திற்கு குறைந்தது 150 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வது நல்லது.

3. புகை மற்றும் மதுபானத்தைத் தவிர்க்கவும்

புகைப்பிடித்தல் இதய நோய்க்கான முக்கிய காரணிகளில் ஒன்றாகும்.

மதுபானத்தைத் தவிர்ப்பது அல்லது கட்டுப்படுத்துவது இதய ஆரோக்கியத்திற்கு உதவும்.

4. உடல் எடையைக் கட்டுப்பாட்டில் வைத்திருங்கள்

அதிக உடல் எடை இதயத்தின் வேலைப்பளுவை அதிகரிக்கிறது.

சரியான உணவு மற்றும் உடற்பயிற்சி மூலம் உடல் எடையைச் சீராக வைத்துக் கொள்ளுங்கள்.

5. மனஅழுத்தத்தைக் குறையுங்கள்

தியானம், யோகா மற்றும் மூச்சுப்பயிற்சி செய்யுங்கள்.

போதுமான ஓய்வு மற்றும் பொழுதுபோக்கிற்கு நேரம் ஒதுக்குங்கள்.

குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் நேரம் செலவிடுங்கள்.

6. இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை அளவை கண்காணியுங்கள்

இரத்த அழுத்தத்தை முறையாக பரிசோதிக்கவும்.

நீரிழிவு நோய் இருந்தால் சர்க்கரை அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும்.

மருத்துவர் பரிந்துரைக்கும் மருந்துகளை தவறாமல் எடுத்துக்கொள்ளவும்.

7. போதுமான தூக்கம் அவசியம்

தினமும் 78 மணி நேரம் தரமான தூக்கம் பெறுங்கள்.

இரவு நேரங்களில் அதிக நேரம் விழித்திருப்பதைத் தவிர்க்கவும்.

இதய நோயின் எச்சரிக்கை அறிகுறிகள்

மார்பு வலி அல்லது அழுத்தம்

மூச்சுத்திணறல்

திடீர் அதிக வியர்வை

கழுத்து, தோள் அல்லது கையில் பரவும் வலி

திடீர் மயக்கம்

இவ்வாறான அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்.

## அறிவிப்பு

தேனி மாவட்டம், பெரியகுளம் தாலுகா, பெரியகுளம் டவுன், வடகரை, பள்ளிவாசல் தெரு, கதவு எண்.7/2 முகவரியில் வசிக்கும் லேட்.மணி அவர்களின் குமாரர் M.ஸ்ரீதர் ஆகிய எனது கட்சிக்காரர் கொடுத்த உண்மை தகவலின்படி, மேற்படி M.ஸ்ரீதர் அவர்களும் மேற்படியாரின் தாயார் M.பிரேமா அவர்களும், ஷை M.ஸ்ரீதர் அவர்களின் உடன்பிறந்த சகோதரி அமுதா, ஸ்ரீவித்யா, நாகலட்சுமி என்ற மூன்று பெண் மக்களும் சேர்ந்து நல்ல முறையில் வாழ்ந்து வந்தோம் எனவும், மேற்படி மூன்று பெண் மக்களுக்கும் நல்லமுறையில் சீர்வரிசைகள் செய்து திருமணம் முடித்து அவரவர் குடும்பத்துடன் நல்லமுறையில் இல்வாழ்க்கை நடத்தி வருகிறார்கள் எனவும், ஷை M.ஸ்ரீதர் திருமணம் முடிக்காத காரணத்தினால் ஷையார்களுடன் வசித்து வருவதாகவும், கடந்த சில நாட்களாக ஷை M.ஸ்ரீதர் மது குடித்துவிட்டு தகாத வார்த்தைகளால் ஷை தாயாரைப் பேசியதாகவும், இதனால் தமக்குள் மனக்கசப்பு ஏற்பட்டு குடும்பச்சூழலில் ஒற்றுமையில்லாத வண்ணம் உருவாகி யுள்ளதாகவும், ஆகவே ஷை M.ஸ்ரீதர் ஷை தாயாரிடமிருந்து ரூபாய்.3,00,000/– (மூன்று லட்சம்) ரொக்கம் பெற்றுக்கொண்டு இதன் மூலம் ஷை தாயாரிடமிருந்து ஷை M.ஸ்ரீதர் விடுதலை பெற்றுக் கொள்வதாகவும், இனிமேல் நமக்குள் உயிர் சொந்தம் பொருள் சொந்தம் எதுவும் கிடையாது எனவும், ஷை M.ஸ்ரீதருக்கு பின்னிட்டு வரும் வாரிசுகளுக்கும் ஷை தாயாரிடமிருந்து வாரிசுப் பாத்தியமோ பின் துயர்ச்சியோ கிடையாது எனவும் இந்த விடுதலை பாத்தியத்தை பத்திரத்தின் மூலம் சாட்சிகள் முன்னிலையில் எழுதிக் கொடுத்துள்ளார் எனவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

முகவரி :

P.சதிஸ்குமார் B.A.B.L.

(வழக்கறிஞர்)

4, நகராட்சி வணிக வளாகம், தென்கரை, பெரியகுளம்,

மொபைல் எண் : 98431 75966.

## பள்ளிக்கு மாணவர்கள் பைக் ஓட்டி வந்தால் ‘பைக்’ பறிமுதல்; பள்ளிக்கல்வித்துறை உத்தரவு...!

சென்னை, மே. 27–



பள்ளிக்கல்வித்துறை அமைச்சராஜ் மோகன் ராஜ் மற்றும் அதிகாரிகள் முதல்வர் விஜயுடன் ஆலோசனை நடத்தினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் ராஜ்மோகன் கூறியதாவது,

தமிழ்நாட்டில் நிலமும் வானிலை சூழல் மற்றும் ஜூன் மாதத்திற்கான வானிலை முன்னறிவிப்புகளை அரசு கவனத்தில் கொண்டு பள்ளிகள் திறக்கப்படுவதற்கு முன் சுகாதாரம் குடிநீர் வசதி போக்குவரத்து ஏற்பாடு பள்ளிகளின் தரம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு தயார் நிலையில் வைத்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றார்.

மேலும், தமிழக பள்ளிக் கல்வித் துறை, மாணவர்கள் இருசக்கர வாகனங்களை பயன்படுத்துவது குறித்து முக்கிய அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது. இதுதொடர்பாக பள்ளிக் கல்வி இயக்குநர் எஸ். கண்ணப்பன் அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். அதில் கூறியிருப்பதா வது, போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மாணவர்களிடம் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க பள்ளிகளில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அனைத்து பள்ளிகளிலும் சாலை பாதுகாப்பு மன்றம் அமைக்க வேண்டும். இந்த மன்றத்தை உடற்கல்வி ஆசிரியர்கள் வழிநடத்த வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும், தினமும் காலை வழிபாட்டு கூட்டத்தில் சாலை பாதுகாப்பு குறித்த தகவல்கள் மற்றும் விழிப்புணர்வு கருத்துகளை மாணவர்களுடன் பகிர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

என்சிசி, என்எஸ்எஸ், சாரணர் இயக்கம் மற்றும் இளஞ்செஞ்சிலுவை சங்க மாணவர்களுக்கு போக்குவரத்து காவல்துறை மூலம் சாலை விதிகள் குறித்த பயிற்சிகள் வழங்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.‘

அதேபோல், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பணிகளில் அவ்வப்போது மாணவர்களை ஈடுபடுத்தலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. மாணவர்கள் தலைக்கவசம் அணிவதின் அவசியத்தை உணர்த்தும் வகையில் பேரணிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்த வேண்டும் என பள்ளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.“

‘மேலும், மாணவர்கள் பள்ளிக்கு இருசக்கர வாகனங்களில் வந்தால், அந்த வாகனங்களை பறிமுதல் செய்து பெற்றோர்களை அழைத்து அறிவுரை வழங்கிய பிறகே ஒப்படைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளிக்கு வெளியிலும் மாணவர்கள் இருசக்கர வாகனங்களை ஓட்டிச் செல்லாமல் இருக்க தேவையான அறிவுரைகளை தொடர்ந்து வழங்க வேண்டும். இவ்வாறு பள்ளிக் கல்வித்துறை வலியுறுத்தியுள்ளது.

## கோவை சிறுமி வழக்கு: கைதான இருவர் மீதும் குண்டாஸ்!

கோவை, மே. 27–



கோவை சிறுமி கொலை வழக்கில் கைதான இருவர் மீதும் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டால் ஓராண்டுக்கு சிறையில் இருந்து வெளியே வர முடியாது.

தமிழகத்தை உலுக்கிய சிறுமி பாலியல் வழக்கில் விரைவாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து குற்றவாளிகளுக்கு விரைந்து தண்டனை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதல் அமைச்சர் விஜய் உறுதியளித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தரப்படாத ராஜ்யசபா எம்.பி., சீட்: மல்லுக்கட்டும் காங்., கோஷ்டி!

புதுடெல்லி, மே. 27–



தமிழகத்தில் காலியாக உள்ள, ராஜ்யசபா எம்.பி., பதவியை, காங்கிரசுக்கு த.வெ.க., வழங்குமா என்பதே, முடிவாகாத நிலையில், அந்த ‘சீட்’டை பெற காங்கிரசுக்குள் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது.

சட்டசபை தேர்தலில், விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதியில், அ.தி.மு.க., சார்பில் வெற்றி பெற்ற முன்னாள் அமைச்சர் சண்முகம், தனது ராஜ்யசபா எம்.பி., பதவியை ராஜினாமா செய்தார். அந்த பதவிக்கு, வரும் ஜூன் 18ல் இடைத்தேர்தல் நடக்க உள்ளது.

தி.மு.க., கூட்டணியில் இருந்து அணி மாறி, தமிழக வெற்றிக் கழக அரசுக்கு ஆதரவளித்து, அமைச்சரவையிலும் இடம் பெற்றுள்ள காங்., கட்சி, தற்போது, ராஜ்யசபா எம்.பி., பதவியையும் எதிர்பார்க்கிறது. தமிழக காங்., கோஷ்டி தலைவர்களுக்கு இந்த எதிர்பார்ப்பு, மிக அதிகமாக உள்ளது. த.வெ.க., – காங்., கூட்டணிக்கு முக்கிய காரணமாக இருந்தவர், அகில இந்திய காங்., தரவு பகுப்பாய்வு பிரிவு தலைவர் பிரவின் சக்கரவர்த்தி.

இவர், லோக்சபா எதிர்க்கட்சி தலைவர் ராகுலுக்கும், முதல்வர் விஜய்க்கும் நெருக்கமானவர் என்பதால், அவருக்காக, ராஜ்யசபா எம்.பி., சீட்டை, காங்கிரசுக்கு முதல்வர் விஜய் தருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக காங்., தலைவர் செல்வப்பெருந்தகை, முன்னாள் தலைவர்கள் அழகிரி, தங்கபாலு, திருநாவுக்கரசர் ஆகியோரும் எம்.பி., பதவிக்காக, டில்லி மேலிட தலைவர்களை சந்தித்து பேசியுள்ளனர். நேரு யுகேந்திராவின் அகில இந்திய முன்னாள் துணைத்தலைவர் ராஜேந்திரன், தனக்கு ராஜ்யசபா எம்.பி., ‘சீட்’ வழங்க கோரி, ராகுலுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

ஒரு ராஜ்யசபா எம்.பி., சீட்டுக்கு, காங்கிரசுக்குள் தலைவர்கள் மல்லுக்கட்டும் நிலையில், ராஜ்யசபா சீட்டை த.வெ.க., வைத்துக் கொள்ள வாய்ப்பு அதிகம் என, அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பெல்ஜியம் ரயில் மோதி விபத்து; பள்ளி குழந்தைகள் பலி!

பிரஸ்ஸல்ஸ். மே. 27–

பெல்ஜியத்தில் தண்டவாளத்தை கடக்க முயன்ற பள்ளி மினி வேன் மீது ரயில் மோதிய விபத்தில், இரண்டு குழந்தைகள் உட்பட 4 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஐரோப்பிய நாடான பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் இருந்து வடமேற்கே உள்ள புக்கன்ஹவுட் என்ற பகுதியில் இந்த கொடூர விபத்து நிகழ்ந்துள்ளது. நேற்று காலை 10க்கும் மேற்பட்ட குழந்தைகளை ஏற்றிக்கொண்டு பள்ளி வேன் ஒன்று தண்டவாளத்தை கடக்க முயன்றுள்ளது. அப்போது அந்த வழியாக 120 கி.மீ., வேகத்தில் வந்த ரயில், பள்ளி வேன் மீது பயங்கரமாக மோதியது. இதில் பள்ளிவேன் தலைகீழாக கவிழ்ந்தது.

இந்த கோர விபத்தில் இரண்டு குழந்தைகள், டிரைவர், உதவியாளர் என 4 பேர் உயிரிழந்தனர். ஐந்து குழந்தைகள் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். ரயில்வே கேட் மூடப்பட்டிருந்தும் வேன் டிரைவர் தண்டவாளத்தை கடக்க முயன்றாரா அல்லது சிக்னல் கோளாறா என்பது குறித்து அதிகாரிகள் தீவிர விசாரிக்கின்றனர்.

## தமிழகத்தின் ஐந்து தொகுதிகளுக்கு விரைவில் இடைத்தேர்தல்?

சென்னை, மே. 27–




அதிமுக எம்.எல்.ஏ.வாக இருந்த இசக்கி சுப்பையா ராஜினாமா செய்ததை தொடர்ந்து, அம்பாசமுத்திரம் தொகுதி காலியானதாக செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது.


தமிழகத்தில் நடைபெற்று முடிந்த சட்டப்பேரவை தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் 108 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. அதனைத் தொடர்ந்து, ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மை கிடைக்காததால் காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்கிச்ஸ்ட கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் கட்சி மற்றும் இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகளின் ஆதரவோடு த.வெ.க. ஆட்சி அமைத்து, தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஜோசப் விஜய் பதவியேற்றார்.

பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய இரண்டு தொகுதிகளில் முதல்வர் விஜய் போட்டியிட்டு இரண்டிலுமே வெற்றி பெற்றார். அதில் திருச்சி கிழக்கில் தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார். அப்போதே, அந்த தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டது.

சட்டப்பேரவை தேர்தல் நடைபெற்று முடிந்த பிறகு, அ.தி.மு.க. சார்பில் வெற்றி பெற்ற மரகதம் குமரவேல் (மதுராந்தகம்–தனி), ஜெயக்குமார் (பெருந்துறை), சத்யபாமா (தாராபுரம்–தனி) ஆகியோர், திங்கள்கிழமை (மே 25) தலைமை செயலகத்தில் சட்டப்பேரவை தலைவர் ஜே.சி.டி. பிரபாகரை சந்தித்து அவர்களின் ராஜினாமா கடிதத்தை அளித்தனர். மேலும், அதே நாளில் அவர்கள் மூவரும் த.வெ.க.வில் இணைந்தனர்.

இதனால், இந்த மூன்று தொகுதிகள் காலியானதாக அறிவிக்கபட்ட நிலையில், அம்பாசமுத்திரம் தொகுதி எம்.எல்.ஏ. இசக்கி சுப்பையாவும் ராஜினாமா செய்துவிட்டு, நேற்று த.வெ.க.வில் இணைந்தார்.

இதனால், அம்பாசமுத்திரம் தொகுதியும் காலியானதாக அறிவிக்கப்பட்டது. தமிழகத்தில் காலி யானதாக அறிவிக்கப்பட்ட தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்துள்ளது. மேலும், இந்த தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் விரைவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



இஸ்மாயில் லக்கி டூராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882


மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881




## வேலை வாய்ப்பு

### இந்திய விமான படையில் 47 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: இந்திய விமானப்படை

அறிவிப்பு எண்: 01/2026

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: 47 கீழ்நிலை எழுத்தர் (LDC), இந்தி தட்டச்சு செய்பவர், சிவிலியன் மெக்கானிக்கல் டிரான்ஸ்போர்ட் டிரைவர் (சாதாரண தரம்) பணியிடங்கள்

பணியிடங்கள்: இந்தியா முழுவதும்

தொடங்கும் தேதி: 02.05.2026

கடைசி தேதி: 31.05.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://indianairforce.nic.in/

### பாதுகாப்பு சேவைகள் ஊழியர்கள் கல்லூரி, வெல்லிங்டன்; 78 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: பாதுகாப்பு சேவைகள் பணியாளர் கல்லூரி, வெலிங்டன்

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: 78 கீழ்நிலை எழுத்தர், சிவிலியன் மோட்டார் ஓட்டுநர் (சாதாரண தரம்), பல்நோக்கு பணியாளர் (அலுவலகம் & பயிற்சி), சுருக்கெழுத்தாளர் தரம் II, மேற்பார்வையாளர் (நெட்வொர்க்கிங்), நெட்வொர்க் நிர்வாகி, வன்பொருள் நிர்வாகி, லைன்மேன், படகு கட்டுபவர், தொழில்நுட்ப உதவியாளர் – அச்சு இயந்திர இயக்குபவர் ஆகிய பதவிகள்

பணியிடத்தில்: வெலிங்டன் (நீலகிரி)

தொடங்கும் தேதி: 23.05.2026

கடைசி தேதி: 12.06.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.dssc.gov.in/

### இந்தியா எலக்ட்ரானிக்ஸ் லிட்., 56 காலிப் பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட்

அறிவிப்பு எண்: 383/HR/HLS&SCB/2025–26

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: தற்காலிகம்

மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 56 கள செயல்பாட்டுப் பொறியாளர், திட்டப் பொறியாளர் பணியிடங்கள்

பணியிட மாற்றம்: பெங்களூரு

தொடங்கும் தேதி: 20.05.2026

கடைசி தேதி: 08.06.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://bel–india.in/

### கராபாக் செயல்பாட்டுப் பொறியாளர், 534 திட்டப் பொறியாளர் பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: கரன்சி நோட் பிரஸ் நாசிக்

அறிவிப்பு எண்: CNPN/HR/Rect./01/2026

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 534 ஜூனியர் டெக்னீஷியன், மேற்பார்வையாளர், செயலக உதவியாளர், ஓவியர், பாதுகாப்பு அதிகாரி மற்றும் நல அலுவலர் பணியிடங்கள்

பணியிடங்கள்: மும்பை, கொல்கத்தா, ஹைதராபாத் & நொய்டா, நாசிக், தேவாஸ், ஹைதராபாத், நர்மதாபுரம்


தொடங்கும் தேதி: 20.04.2026

கடைசி தேதி: 03.06.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://cnpnashik.spmcil.com/

### நையாண்டி நோட்டில் 08 காலி இடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: நபார்டு வங்கி

அறிவிப்பு எண்: 01

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 08 சிறப்புப் பணியிடங்கள்

பணியிட மாற்றம்: மும்பை

தொடங்கும் தேதி: 14.05.2026

கடைசி தேதி: 01.06.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.nabard.org/

### ஸ்டேட் பாங்கில் 100 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா

அறிவிப்பு எண்: CRPD/SCO/2026–27/05

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 100 வர்த்தக நிதி அதிகாரி (MMGS–II) பணியிடங்கள்

பணியிடங்கள்: இந்தியா முழுவதும்

தொடங்கும் தேதி: 13.05.2026

கடைசி தேதி: 02.06.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://sbi.bank.in/

## காவிரியில் ஜூன் மாதம் 9.91 டிஎம்சி நீர் திறக்க கர்நாடகாவிற்கு உத்தரவு!

சென்னை, மே. 27–

காவிரி நதி நீரை சுமுகமான முறையில் பகிர்ந்து கொள்வதற்காக சுப்ரீம்கோர்ட்டு உத்தரவின்பேரில் காவிரி மேலாண்மை ஆணையமும், காவிரி ஒழுங்காற்றுக்குழுவும் அமைக்கப்பட்டது. இந்த 2 அமைப்புகளும் அவ்வப்போது கூடி நதிநீர் பிரச்சினைகளில் சமரச தீர்வை கண்டு வருகிறது. இந்த வகையில் காவிரி மேலாண்மை ஆணைய கூட்டம் இதுவரை 50 முறை நடந்துள்ளது. 51–வது கூட்டம் வருகிற 28–ந்தேதியன்று நடத்த திட்டமிடப்பட்டு இருந்தது. இந்தநிலையில் இந்த கூட்டத்தை அதற்கு முன்னதாக நடத்த முடிவு செய்து நடத்துவதாக மேலாண்மை ஆணையம் அறிவித்திருந்தது.

இதன்படி காவிரி மேலாண்மை ஆணையத்தின் 51வது கூட்டம் நேரடியாகவும், காணொலி வாயிலாகவும் டெல்லியில் இன்று நடைபெற்றது.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:–



புதுடெல்லியில் எஸ். கே.ஹல்தார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 51வது கூட்டத்தில், முனைவர். சத்யபிரத சாகு இ.ஆ.ப. தமிழ்நாடு உறுப்பினர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர், நீர்வளத்துறை அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக கலந்து கொண்டார்.

தமிழ்நாடு உறுப்பினர். தற்பொழுது (25.05.2026) மேட்டூர் அணையின் நீர் இருப்பு 40.742 டிஎம்சி ஆக உள்ளது எனவும். அணையிலிருந்து வினாடிக்கு 1003 கனஅடி நீர் குடிநீர், தொழிற்சாலை பண்பாட்டிற்கும் மற்றும் சுற்றுச்சூழல் நீர் ஓட்டத்திற்காகவும் திறந்துவிடப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

நடப்பு நீர்பாசன ஆண்டில் (2025–2026) 2025, ஜூன் 1 முதல் 2026 மே 24 ஆம் தேதி வரை பில்லிகுண்டுலுவில் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நீரின் அளவான 176.885 டி.எம்.சிக்கு பதிலாக மிகை நீர் உள்பட கிடைக்கப்பெற்ற நீரின் அளவு 329:166 டி.எம்.சி. ஆகும். இதனை சுட்டிகாட்டி கர்நாடக உறுப்பினர், கர்நாடகம் அளித்துள்ள மிகை நீரையும் கணக்கில் கொள்ள வேண்டும் என்று தெரிவித்ததை ஏற்றுக்கொள்ள இயலாது என்றும் கர்நாடக அதன் நீர்த்தேக்கத்தில் தேக்க முடியாமல் வெளியேற்றிய நீரினை அது சொந்தம் கொண்டாட முடியாது என்றும் தமிழக உறுப்பினர் வலியுறுத்தினார்.

இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்தின் அறிக்கையின்படி 2026 ஆம் ஆண்டு மே 26 அன்று தென்மேற்கு பருவமழை கேரளாவில் துவங்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இப்பருவமழை இயல்பான அளவாக இருக்கும் என்ற கருத்தின்படியும், கர்நாடக அணைகளின் நீர் வரத்தினை கருத்தில் கொண்டும் தமிழகத்திற்கு 2026 ஜூன் மாதம் வழங்கப்பட வேண்டிய 9.91 டி.எம்.சி நீரினை சுப்ரீம் கோர்ட்டின் ஆணையின்படி கர்நாடகம் பில்லிகுண்டுலுவில் உறுதி செய்யுமாறு ஆணையத்தை வலியுறுத்தினார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் காவிரியில் இருந்து தமிழ்நாட்டுக்கு ஜூன் மாதம் திறக்க வேண்டிய 9.91 டி.எம்.சி. நீரை திறந்து விடுமாறு டெல்லியில் நடைபெற்ற கூட்டத்தில் கர்நாடகாவுக்கு காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

## தமிழக புதிய டிஜிபி அறிவிப்பு விரைவில்?

சென்னை, மே. 27–

தமிழக காவல் துறையின் சட்டம் – ஒழுங்கு டிஜிபி தேர்வுக்கு 3 பேரை மத்திய பணியாளர் தேர்வாணையம் (யுபிஎஸ்சி) பரிந்துரைத்துள்ளது.



ராஜீவ்குமார், சந்தீப் ராய் ரத்தோர், மகேஷ்குமார் அகர்வால்

தமிழக சட்டம் – ஒழுங்கு டிஜிபி–யாக இருந்த சங்கர் ஜிவால் கடந்த ஆண்டு ஆக.31–ம் தேதியுடன் ஓய்வு பெற்றார். டிஜிபி பணி ஓய்வு பெறுவதற்கு 3 மாதங்களுக்கு முன்னரே, அடுத்து தகுதிவாய்ந்த டிஜிபி–க்களின் பட்டியலை மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்துக்கு (யுபிஎஸ்சி) மாநில அரசு அனுப்பிவைத்திருக்க வேண்டும். ஆனால், அப்படி செய்யவில்லை. மேலும், பணி மூப்பு அடிப்படையில் டிஜிபி–க்களான சீமா அகர்வால், ராஜீவ்குமார், சந்தீப்ராய் ரத்தோர் ஆகிய 3 பேரில் ஒருவர் புதிய டிஜிபி–யாக நியமிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு எழுந்தது. ஆனால், தமிழக அரசு இந்த பட்டியலிலேயே இல்லாத ஜூனியரான வெங்கடராமனை சட்டம் – ஒழுங்கு பொறுப்பு டிஜிபி–யாக நியமித்தது. இதற்கிடையே தமிழக சட்டப்பேரவை தேர்தல் நடந்தபோது, சந்தீப் ராய் ரத்தோரை சட்டம் – ஒழுங்கு டிஜிபி–யாக தேர்தல் ஆணையம் நியமித்தது. தற்போது தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய சூழலில், தமிழகத்தில் புதிய டிஜிபி நியமனம் தொடர்பாக டெல்லியில் மத்திய பணியாளர் தேர்வாணையம் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் தமிழக தலைமைச் செயலர் சாய்குமார், உள்துறை செயலர் மணிவாசன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதில், டிஜிபி–க்களான ராஜீவ்குமார் (காவல் உயர் பயிற்சியகம்), சந்தீப் ராய் ரத்தோர், மகேஷ் குமார் அகர்வால் (அயல் பணியாக எல்லை பாதுகாப்பு படை–டெல்லி) ஆகிய 3 பேர் பட்டியலுக்கு மத்திய பணியாளர் தேர்வாணையம் ஒப்புதல் வழங்கி அவர்களின் பெயர்களை பரிந்துரைத்துள்ளது.

இந்த பட்டியல் தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். இவர்களில் ஒருவரை சட்டம் – ஒழுங்கு டிஜிபி–யாக தமிழக அரசு முறைப்படி அறிவிக்கும். இதன் முடிவிலேயே சந்தீப் ராய் ரத்தோர்தொடர்வாரா? என்பது தெரியவரும். ஏற்கெனவே டிஜிபி பட்டியலில் சீமா அகர்வால், வன்னிய பெருமாள், வெங்கடராமன், வினித் தேவ் வான்கடே, சஞ்சய் மாத்தூர் பெயர்கள் இருந்தன. இதில் சீமா அகர்வால் அடுத்த மாதத்துடன் பணி ஓய்வுபெற உள் ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் பள்ளிகள் ஜூன் 4-ம் தேதி திறப்பு!

சென்னை, மே. 27–

தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:–

2026–2027 கல்வியாண்டில், நான்காம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை 1.06.2026 அன்றும், ஒன்றாம் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை 4.06.2026 அன்றும் பள்ளிகள் மீண்டும் திறக்கப்படும் என்று பள்ளிக் கல்வித் துறை முன்னதாக அறிவித்திருந்தது. அதனைத் தொடர்ந்து, நிர்வாக வசதியை உறுதி செய்வதற்கும், வெவ்வேறு வகுப்புகளில் படிக்கும் பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைத் தவிர்ப்பதற்கும், அனைத்து வகுப்புகளுக்கும் ஒரே மாதிரியான திறப்புத் தேதியைக் கோரி பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல்வேறு தரப்பினரிடமிருந்து



கோரிக்கைகளும் முறையீடுகளும் பெறப்பட்டன.

மேலும், ஜூன் முதல் வாரத்திற்கான தற்போதைய வானிலை நிலவரங்களும் முன்னறிவிப்புகளும், மாநிலத்தின் பல பகுதிகளில் பருவமழைக்கு முந்தைய செயல்பாடு, விட்டுவிட்டு பெய்யும் மழை, ஈரப்பதம் மற்றும் அதனுடன் தொடர்புடைய வெப்பம் ஆகியவை தொடர வாய்ப்புள்ளது என்பதைக் காட்டுகின்றன. பள்ளிகள் மீண்டும் திறக்கப்படுவதற்கு முன்னர், சுகாதாரம், குடிநீர் வசதிகள், போக்குவரத்து ஏற்பாடுகள் மற்றும் ஒட்டுமொத்த வளாகத் தயார்நிலை தொடர்பான பள்ளிகளின் ஆயத்தத் தேவைகளையும் அரசு ஆய்வு செய்துள்ளது.

தொடர்புடைய அனைத்து காரணிகளையும் கவனமாகப் பரிசீலித்த பின்னர், தமிழகத்தின் முதல்–அமைச்சர் ராஜ் மோகன் அவர்களின் அறிவுறுத்தல்களின்படி, தமிழகத்தில் உள்ள அரசு, அரசு உதவி பெறும், மெட்ரிகுலேஷன் மற்றும் தனியார் பள்ளிகள் உள்ளிட்ட அனைத்துப் பள்ளிகளும், ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை வியாழக் கிழமை, 4.06.2026 அன்று ஒரே சீராக மீண்டும் திறக்கப்படும் என்று பள்ளிக் கல்வி, தமிழ் அபிவிருத்தி மற்றும் தகவல் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பள்ளிகள் மீண்டும் திறக்கப்படுவதற்கு முன்னர் தேவையான ஆயத்தப் பணிகள் முடிக்கப்படுவதையும், மாணவர்களின் நலன், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்விற்கான போதுமான ஏற்பாடுகள் செய்யப்படுவதையும் உறுதி செய்யுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பெற்றோர்கள், ஆசிரியர்கள், பள்ளி நிர்வாகங்கள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பு கோரப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரெயில் நிலையங்களில் மருந்தகங்களுடன் கூடிய அவசர மருத்துவ அறைகள்: தெற்கு ரெயில்வே டெண்டர் கோரியது!

சென்னை, மே. 27–

தெற்கு ரெயில்வே சென்னை கோட்டம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

தெற்கு ரெயில்வேயின் சென்னை கோட்டம், எழும்பூர், தாம்பரம், காட்பாடி மற்றும் செங்கல்பட்டு ஆகிய ரெயில் நிலையங்களில் 24 மணி நேரமும் இயங்கும் மருந்தகங்களுடன் கூடிய அவசர மருத்துவ அறைகளை இயக்குவதற்கும் மற்றும் பராமரிப்பதற்கும் தகுதியான நிறுவனங்களிடமிருந்து டெண்டர் கோரப்படுகிறது. பயணிகள் மற்றும் ரெயில் நிலையத்தைப் பயன்படுத்துபவர்களுக்கு தேவையான அவசர மருத்துவ உதவிகளை உடனுக்கு டன் வழங்குவதே



இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

மருத்துவ அறைகளில் பயிற்சி பெற்ற மருத்துவப் பணியாளர்கள், முதலு தவி வசதிகள், அவசர சிகிச்சை ஆதரவு, அத்தியாவசிய மருந்துகள், ஆம்பு லன்ஸ் சேவை மற்றும் உயிர் காக்கும் மருத்துவக் கருவிகள் ஆகியவை 24 மணி நேரமும் தடையின்றி கிடைக்க வழிவகை செய்யப்படும். மருத்துவ நெறிமுறைகள் மற்றும் ரெயில்வே வழிகாட்டுதல்களின்படி, மேம்பட்ட மருத் துவ சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளை தங்களின் முதன்மை ஆஸ்பத்திரி அல்லது அதனுடன் தொடர்புடைய சுகாதார மையங்களுக்கு பரிந்து ரைத்து அழைத்துச் செல்வதற்கும் இது வழிவகுக்கும். தகுதியான ஆஸ்பத் திரிகள், சுகாதார சேவை நிறுவனங்கள் மற்றும் தேவையான அனுபவமும், சட்டப்பூர்வ உரிமங்களும் கொண்ட மருத்துவ முகமைகள் டெண்டரில் பங்கேற்கலாம். விருப்பமுள்ள ஏலதாரர்கள் இந்திய ரெயில்வேயின் www.ireps.gov.in என்ற இணையதளம் மூலம் ஜூன் 1–ந்தேதி மாலை 3 மணிக்குள் தங்களின் ஒப்பந்தப்புள்ளிகளைச் சமர்ப்பிக்கலாம். இதுதொடர்பான கூடுதல் விவரங்கள் மற்றும் சந்தேகங்களுக்கு 8072114520 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## இ.டி. ரெய்டு: கேரள அரசியலில் பரபரப்பு!

கேரளத்தின் முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான பினராயி விஜயன் தொடர்பான இடங்களில் அமலாக்கத்துறை இன்று சோதனை நடத்தியது.. பினராயி விஜயனின் திருவனந்தபுரம், கண்ணூர் வீடு, அவரின் மருமகன் முகமது ரியாஸ் தொடர்புடையா 12 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை மேற்கொண்டது..

பினராயி விஜயனின் மகள் வீணாவுக்கு சொந்தமான நிறுவனமான 'எக்சாலஜிக் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்' (Exalogic Solutions Pvt. Ltd.) தொடர்பான நிதிப் பரிவர்த்தனைகள் குறித்த 'கொச்சின் மினரல்ஸ் அண்ட் ரூடைல் லிமிடெட்'



(CMRL) வழக்கில் இந்த சோதனை நடத்தப்பட்டது..

அதிகாரிகள் அளித்த தகவலின்படி, பணமோசடி தடுப்புச் சட்டத்தின் (PMLA) விதிகளின் கீழ், திருவனந்தபுரத்தில் உள்ள விஜயனின் வாடகை இல்லம் மற்றும் வேறு 12 இடங்களிலும் அமலாக்க இயக்குநரகம் சோதனைகளை மேற்கொண்டு வருகிறது.

'கொச்சின் மினரல்ஸ் அண்ட் ரூடைல் லிமிடெட்' (CMRL) என்ற தனியார் நிறுவனம், 2018 முதல் 2019 வரையிலான காலகட்டத்தில், விஜயனின் மகள் டி. வீணாவின் நிறுவனமான 'எக்சாலஜிக் சொல்யூஷன்ஸ்'–க்கு 1.72 கோடி ரூபாயை சட்டவிரோதமாக வழங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அந்தத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (IT firm), CMRL நிறுவனத்திற்கு எவ்வித சேவையையும் வழங்காத நிலையிலும் இத்தொகை வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த வழக்கில் அமலாக்க இயக்குநரகத்தின் நடவடிக்கைகளை ரத்து செய்யக் கோரி CMRL நிறுவனம் தாக்கல் செய்த மனுவை, கேரள உயர் நீதி மன்றம் செவ்வாய்க்கிழமை யன்று தள்ளுபடி செய்தது. இந்த குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்துவதற்காக, அமலாக்க இயக்குநரகம் 2024–ஆம் ஆண்டில் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் (PMLA) வழக்கு பதிவு செய்திருந்தது.

## மேற்கு வங்க எல்லையில் பரபரப்பு; திரளும் வங்கதேச மக்கள்!

கொல்கத்தா, மே. 27–

மேற்கு வங்கத்தில் அண்மையில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக அமோக வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்துள்ளது.

அந்த மாநில முதல்வர் சுவேந்து அதிகாரி கூறும்போது, "மேற்கு வங்கத்தில் சட்டவிரோதமாக குடியேறிய வங்கதேச மக்கள் அடுத்த 30 நாட்களுக்குள் வெளியேற்றப்படுவார்கள். இதற்காக "கண்டறிதல், நீக்குதல், வெளியேற்றுதல்" திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பிடிபடும் வங்கதேச மக்கள் எல்லைப் பாதுகாப்புப் படை (பிஎஸ்எப்) வீரர்கள் மூலம் வங்கதேசத்திடம் ஒப்படைக்கப்படுவார்கள்'' என்று தெரிவித்தார். மேலும் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு தடுப்பு



மையங்களை அமைக்கவும் முதல்வர் சுவேந்து உத்தரவிட்டுள்ளார். பாதுகாப்புப் படையினரின் சோதனையில் சிக்கும் வங்கதேச மக்கள், இந்த சிறப்பு தடுப்பு மையங்களில் அடைக்கப்படுவார்கள். மாவட்ட ஆட்சியரின் விசாரணைக்குப் பிறகு அவர்கள் பிஎஸ்எப் படையிடம் ஒப்படைக்கப்பட உள்ளனர். அந்த மாநிலத்தில் தற்போது சட்டவிரோத குடியேறிகளை கண்டறியும் பணி தீவிரப்பட்டு உள்ளது.

இதன்காரணமாக கடந்த இரு வாரங்களில் மட்டும் சுமார் 26,000–க்கும் மேற்பட்டோர் தாங்களாகவே வங்கதேசத்துக்கு தப்பிச் சென்று விட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்த சூழலில் வடக்கு 24 பர்கானஸ் மாவட்டத்தின் ஹக்கிம்பூர் எல்லைப் பகுதியில் நூற்றுக்கணக்கான வங்கதேச மக்கள் குவிந்து வருகின்றனர். பரிசோதனைகளுக்குப் பிறகு அவர்கள் வங்கதேச எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்களிடம் ஒப்படை க்கப்படுவார்கள் என்று பிஎஸ்எப் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## டாஸ்மாக் பணியாளர்கள் பணிக்கு திரும்ப வேண்டும்!

சென்னை, மே. 27–

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் விக்னேஷ் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

சென்னை ஐகோர்ட்டு உத்தரவின்படி, பயன்படுத்தப்பட்ட காலி மதுபான பாட்டில்களை திரும்பப்பெறும் திட்டம் மே மாதம் 2022–ம் ஆண்டு முதல் நீலகிரி மாவட்டத்தில் முன்னோடித் திட்டமாகத் தொடங்கப்பட்டு படிப்படியாகத் தற்பொழுது சென்னை, நெல்லை, விருதுநகர் நீங்கலாக தமிழ்நாட்டின் பிற அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கிடையே பயன்படுத்தப்பட்ட காலி




மதுபான பாட்டில்களை வெளிமு கமை வழியாகத் திரும்பப்பெற வேண்டும் என்ற பிரதான கோரிக்கையை முன்னிறுத்தி ஈரோடு, சேலம், நாமக்கல், திருப்பூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த பெரும்பாலான கடைகள் நேற்று திறக்கப்படவில்லை.

இந்தநிலையில், பணியாளர்களின் கோரிக்கைக்கு இணங்க வெளிமுகமை யின் வழியாக காலி மதுபான பாட்டில்களை திரும்பப்பெறும் திட்டத்தை உடனடியாக உருவாக்கி ஐகோர்ட்டில் உறுதிபத்திரம் அளித்து வரும் ஜூன் மாத இறுதிக்குள் பணியாளர்களின் கோரிக்கையை முழுவதும் நிறைவேற் றும் வண்ணம் அவர்கள் பயன்படுத்தப்பட்ட காலி மதுபான பாட்டில்களை கையாளும் தற்போதைய நடைமுறையை முழுமையாக தவிர்க்கும் வகை யில் திட்டம் செயல்படுத்தப்படும். எனவே, பணியாளர்கள் அனைவரும் ஐகோர்ட்டு தீர்ப்புக்கு மதிப்பளித்து பணியாளர் நலன் காக்க நிர்வாகம் முன்மொழியும் இத்திட்டத்தின் மீது நம்பிக்கை கொண்டு இன்று முதல் வழக்கம் போல பணிக்குத் திரும்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020